ஸ்ரீரஸ்து.

ஸ்ரீ மாகாலக்ஷ்ம்யை நம:

"ஸ்த்ரீதர்மம்"

ஸம்ஸ்க்ருத பாஷையில் விசேஷ பரிசயமில்லாதவர்
களாயும், நம் வைதிக மதாசாரங்களில் விசேஷ
விச்வாஸமுடையவர்களான பதிவ்ரதா
சிரோன்மணிகளுக்கு உபகாரமாக
புராதன தர்ம சாஸ்த்ர
க்ரந்தங்களிலிருந்து

புத்தங்கோட்டகம்

வித்வான்

ஸ்ரீ உ. வே. ஸ்ரீநிவாஹாச்சாரியராஸ்

மொழிபெயர்க்கப்பட்டது.

ஸ்ரீ நிலயம் அச்சியந்த்ரசாலை,
பெரியகடைவீதி,
திருச்சி.

—

1931

RG1
N131
17040

ஸ்ரீரஸ்து.

குறிப்பு.

நமது தேசத்தில் தற்காலத்து [illegible]தரிக்கள்ளான நாஸ்திகர் களுடைய சகவாசத்தினால் ஸர்வேசுவரன ஒருவன் உண்டென் றும் அவனதாக்ஞாரூபங்களான சாஸ்திரங்களை மீறி நடந்தால் நமக்கு நரகம் முதலான கஷ்டங்கள் நேரிடுமென்றும் ஆகை யினால் சாஸ்திரங்களில் சொல்லுகிறபடியே நாம் நடக்கவேண்டிய தவச்யமென்றும் இவ்வாறு முக்யமான மனுஷ்யஸ்வ பாவங்களை மறந்து ஆகாரம், நித்திரை, பயம், மைதுனாதிகளாகிற சிற்சில சிற்றின்பங்களையே புருஷார்த்தங்களாக மோகித்துக் கிடக்கும் மிருகாதிகளோடு வாசியறியாத நம் புத்திமான்களான புருஷர்க ளொருபுறம் நிறைந்திருக்க அனாதிகாலமாக வைதிகவம்சத்தில், பிறந்து பழகின பழைய வாசனையின் மகிமையினால் இக்கலி யுகத்திலும் ஆஸ்திக்ய புத்தி, ஆசார சரத்தை ஆர்ய பக்தி முதலான நற்குணங்கள் நமது தேசத்து ஸ்த்ரீகளிடமே குடி கொண்டிருப்பதை நாம் பார்த்துவருகிறோம்.

ஆகையினாலன்றோ நம் ப்ரஜாஸாரங்கள் பாழாகப் போகா மல் ப்ரணவோடிருப்பதாகவே நாம் நினைத்திருக்கிறோம். தற் காலம் அவ்வைதிகாசாரத்திற்கு விரோதிலமான நம்தேச ஸ்த்ரீ களுக்கு அப்பழைய வாசனையும் மாறாதிருப்பதையே முக்கிய மாகக்கருதி வடமொழி ரூபமான தர்ம சாஸ்திரங்களிற் சொல் லப்பட்டிருக்கும் அவச்யமான ஸ்த்ரீகளுடைய தர்மங்களை மட்டும் யாவரும் அறிந்து அனுஷ்டிக்கும்படி சுலபமான தமிழ் பாஷையில் சுருக்கமாக யெழுதப்பட்டிருக்கிறது. அதிலும் நம் தேசத்தில் பலவிதமான ஆசார பேதங்களிருப்பதால் அவை யெல்லாவற்றையும் எழுதினால் விஸ்தாரமாகுமென்று நினைத்து யாவரும் பொதுவாகச் செய்யவேண்டிய எல்லா தருமங்களும் வைஷ்ணவ ஸ்த்ரீகளுடைய விசேஷாசாரங்களுமே இங்கு யெழுதப்பட்டிருக்கிறது. அவ்வைஷ்ணவாசாரங்களிலுமுள்ள சிற்சில மாறுதல்களை அவரவர் ஸம்பிரதாயப்படி கற்றுணர்ந்த பெரியோர்களை ஆச்ரயித்துத் தெரிந்துகொள்ளவும். இந்த புஸ்தகத்தின் விஷயங்களையும், பெரியோர்களிடம் உபதேச மூலமாகவே தெரிந்துகொள்ளவேண்டும்.

ஸ்ரீரஸ்து

ஸ்ரீ மகாலக்ஷ்மியை நம:

"ஸ்த்ரீ தர்மம்"

876
301.426

கன்னிகைகளின் தர்மம்.

மூன்று வயது வரையில் கன்னிகைகளை புருஷர்களில் முதலியவர்கள் தொட்டால் அக்குழந்தைகளை சுத்த ஜலத்தினால் ப்ரோக்ஷிக்க வேண்டும்.

மூன்று வயதுக்குமேல் ஐந்து வயது வரையில் கன்னிகைகளை ஸ்திரீயார்கள் தொட்டால் அக்கன்னிகைகள் ஆசமனம் செய்யவேண்டும்.

ஐந்து வயதுக்குமேல் கன்னிகைகளை புருஷர்கள் தொட்டால் ஸ்நானம் செய்யவேண்டும்.

கன்னிகைகள் மூன்று வயதுவரையில் ஜலமலங்களை விட்டால் பெரியவர்கள், மண்ணினாலும் ஜலத்தினாலும் சுத்திசெய்து வைக்கவேண்டும்.

அதற்குமேல் ஏழாவது வயது வரையில் கன்னிகைகள் தாங்களே சுத்திசெய்து கைகால்களையும் அலம்பிக்கொள்ள வேண்டும்.

ஏழாவது வயதுக்குமேல் மேற்சொல்லப்போகிறபடி கன்னிகைகள் சுத்திக்கிரமங்களையெல்லாம் செய்துகொள்ளவேண்டும்.

பிராமண குழந்தைகள் பால்யம் முதல் கள், மாம்ஸம் சாப்பிடக்கூடாது.

விவாஹமடைந்த ஸ்த்ரீகளின் தர்மம்.

சுமங்கலியான ஸ்த்ரீயானவள் தினந்தோறும் சூரியன் உதயத்திற்கு 6-நாழிகைக்கு முன்னமே, பர்த்தா எழுந்திருப் பதற்கு முன்னம் படுக்கையைவிட்டு எழுந்திருந்து கால், கைகளை சுத்தமான ஜலத்தினால் அலம்பிக்கொண்டு இரண்டு தடவை ஆசமனம் செய்யவேண்டும்.

ஆசமன விதி.

கிழக்கு அல்லது வடக்கு முகமாக குந்தி உட்கார்ந்து கொண்டு இரண்டு கைகளையும் இரண்டு முழங்கால்களுக்குள் வைத்துக்கொண்டு இடது கையினால் ஜலத்தை தொட்டுக் கொண்டு வலதுகையின் விரல்களைப் பசுமாட்டின் காதைப்போல சேர்த்துவைத்து உளுந்து முழுகக்கூடிய ஜலத்தையெடுத்து சுண்டுவிரலை நீட்டிவிட்டு, நாக்கினால் நக்காமலும் சப்தம் பண்ணி உருஞ்சாமலும் அடிக்கையினால் **அச்யுத** யென்று சொல்லி முதல் தடவையும் **அனந்த** யென்று சொல்லி இரண்டாந்தடவையும் **கோவிந்த** யென்று சொல்லி மூன்றாந்தடவையும் கையிலிருக்கும் ஜலத்தை சாப்பிடுவது ஓர் ஆசமனமாகும்.

சுத்த ஜலமில்லாவிட்டால் தன்னுடைய மூக்கையும் வலது காதையும் இரண்டுதடவை தொடவேண்டும். ஆகாரம் ஜீர்ண மாகாமலிருந்தால் பிறகும் கொஞ்சகாலம் தூங்கலாம். சூரிய னுடைய உதயகாலத்தில் ஒருநாளும் தூங்கக்கூடாது.

பகவத்யானம்.

பிறகு படுக்கையிலேயே உட்கார்ந்துக்கொண்டு பகவானைத் தியானம் செய்துகொண்டு ஹரி: யென்று 7-தடவை, வாயினால் சொல்லிவிட்டு பிறகு, **வாசுதேவாய நம: ஸங்கர்ஷணாய நம: ப்ரத்யும்னாய நம: அநிருத்தாய நம: கேசவாய நம: நாராயணாய நம: மாதவாய நம: கோவிந்தாய நம: விஷ்ணவே நம: மதுசூதனாய நம: த்ரிவிக்ரமாய நம: வாமனாய நம: ச்ரீதராய நம: ஹ்ருஷீகேசாய நம: பத்மனாபாய நம: தாமோதராய நம: மத்ஸ்யாய நம: கூர்மாய நம: வராகாய நம: நரஸிம்மாய நம: வாமனாய நம: பரசுராமாய நம: ஸ்ரீராமாய நம: பலராமாய நம: கிருஷ்ணாய நம: கல்கினே நம:** யென்கிற திருநாமங்களையும் சொல்லி, **திருப்பல்லாண்டு, திருப்பள்ளியெழுச்சி திருமாலை** முதலிய ப்ரபந்தங்களையும் பக்தி யோடு சொல்லி பிறகு தனது ஜந்மகாலங்கள் வீணாகப்போனதை நினைத்து நிர்வேதத்தையடைந்து **வாடினேன் வாடி** யென்கிற 10 பாசுரங்களை அனுசந்திக்கவும். ஸம்ஸ்க்ருத பாஷையிலுள்ள

ஸ்தோத்திரங்களையும் சொல்லலாம். ரிஷிகள் அருளிச்செய்த ஸ்தோத்திரங்களை சொல்லக்கூடாது.

கிரகசுத்தி.

பிறகு வீட்டிற்கு உள் முற்றத்திலும் வாசற் புறத்திலும் பசுவின் சாணிகறைத்த ஜலத்தை தெளித்து ஸம்மார்ஜனியினால் பெருக்கி படுத்துறங்கின இடம் முதலியவைகளையும் கோமய ஜலத்தினால் தெளித்து துடைத்து பெருக்கி கோலமிட்டு வைக்க வேண்டும். ஞாயர், செவ்வாய், வெள்ளி, சனிக்கிழமைகளிலும் சதுர்தசியிலும, கல்யாணம் முதலிய விசேஷ தினங்களிலும் வீட்டை கோமய ஜலத்தினால் மெழுகி கோலமிட்டுவைக்க வேண்டும். சுற்றத்த தினத்திலும் கஷ்டமடைந்த காலத்திலும் கோலமிடக்கூடாது. கீழ்ச்சொன்ன காரணமில்லாமல் வீட்டை மெழுகக்கூடாது.

ஜலமலங்களை விடும் விதி.

ஜலமலங்களை விடுவதற்கு முன்னமேயே சௌசம் பண்ணுவதற்காக பெரிய பாத்திரத்தில் ஜலத்தையும் சுத்தமான மண்ணையும் ஓரிடத்திற்கொண்டுபோய் வைத்துவிட்டு பிறகு ஜலமலங்களை விடவேண்டும். அல்லது ஓர் குழியிலாவது ஜலத்தை கொட்டிவைத்துக்கொள்ளவேண்டும். புண்ணிய தீர்த்தங்களின் கறையிலும், தேவாலய ஸமீபத்திலும், ஜலத்திலும், பசுமாடு கட்டுமிடத்திலும், பயிருள்ள பூமியிலும், தர்பம், துளசி, பலாசம் முதலான பரிசுத்த வஸ்துக்களுடைய சமீபத்திலும் வழிகளிலும் வீட்டின்சமீபத்திலும் ஜலமலங்களை விடக்கூடாது.

பகலிலும் * ஸந்தியா காலங்களிலும் வடக்குமுகமாகவும், இரவு யென்கிற மூன்று யாமங்களிலும் தெற்குமுகமாகவும், உட்கார்ந்துகொண்டே ஜலமலங்களை விடவேண்டும். நின்றுகொண்டு விடக்கூடாது.

மலஜலங்களை விட்டதுமுதல் சௌசம்பண்ணி முடியும் வரையில் வார்த்தை சொல்லக்கூடாது. தேவாலயம், ஜலம், அக்னி, பசு, பிராமணன், சூரியன், சந்திரன், நக்ஷத்திரங்கள், புருஷர்கள் இவைகளைப் பார்த்துக்கொண்டு ஜலமலங்களை விடக்கூடாது.

---

* சூரியன் உதயத்திற்கு முன்பு $3\frac{3}{4}$-நாழிகையும், அஸ்தமனத்திற்கு பின்பு $3\frac{3}{4}$-நாழிகையும் ஸந்தியாகாலம்.

சௌசத்திற்கு யோக்யமான மண்.

உப்புமண், புற்றுமண், உழுதமண், எலிவளைமண், ஜந்துக்களுள்ள மண், பிறர் சௌசம்செய்து மிகுந்த மண் முதலிய மண்ணைத்தவிர, வேறுசுத்தமான மண்ணினால் சௌசம் செய்ய வேண்டும். மண்ணில்லாமல் சௌசம் செய்யக்கூடாது. ஜலத்தில் உட்கார்ந்து சௌசம் பண்ணினால், ப்ரம்மஹத்தியை பாபம் வரும். ஆகையினால் ஜலத்திலிருந்து ஒருகாலத்திலும் சௌசம் பண்ணக்கூடாது. புண்ணிய தீர்த்தங்கள், ஆறுகளுடையவும், ஜலக்கரையில் உட்கார்ந்து சௌசம்பண்ணக்கூடாது. புண்ணிய தீர்த்தங்களல்லாத குட்டை, சிறுகால்வாய்களின் ஜலத்தின் அருகில் முக்கால் முழம் ஒதுங்கி கரையில் உட்கார்ந்து அசுத்தங்கள் ஜலத்திற்கு வராதபடி சௌசம்பண்ணவேண்டும். குட்டை, கால்வாய்களில் சௌசம்பண்ணும்பொழுது ஜலத்துக்குள்ளிருந்தே சௌசத்திற்குவேண்டிய மண்ணை யெடுத்துக்கொள்ள வேண்டும்.

சௌசத்தின் க்ரமம்.

ஜலத்திற்கு சமீபத்தில் குந்தி உட்கார்ந்துகொண்டு இடதுகையை இரண்டு காலுக்கும் நடுவில் வைத்துக்கொண்டு வலதுகையை வலதுகாலுக்கு வெளியில் வைத்துக்கொண்டு வலதுகையினால் மண்ணையெடுத்து இடதுகையில்போட்டு குதத்தை தேய்த்து வலதுகையினால் ஜலத்தை இறைத்து தேய்த்த மண் போகும்வரையில் இடதுகையினால் குதத்தை அலம்ப வேண்டும். இப்படி 6 தடவை மண் போட்டு அலம்பவேண்டும். முதல் தடவை மண் 4 விறல் அளவும், 2, 3, 4, 5, 6-வது தடவை மண்களை அதில் பாதியளவும் போட்டுக்கொள்ள வேணும். பிறகு குஹ்ய ஸ்தானத்திலும் 2 தடவை மண் போட்டு சுத்திசெய்யவேண்டும். ஜலத்தைமட்டும் விட்ட சமயங்களில் குஹ்யத்தில்மட்டும் 2 தடவை மண்போட்டு அலம்பி அலம்பின இடதுகையை 3 தடவை மண்போட்டு அலம்பவும். புருஷ ஸங்கமம் நேர்ந்தால் 4தடவை மண்போட்டு குஹ்யத்தை அலம்பவும்.

ஒவ்வொரு தடவை மண்போட்டு அலம்பினவுடன் இடதுகையையும் ஒரு தடவை மண்போட்டு அலம்பவேண்டும். பிறகு இடதுகையில் நெல்லிக்காயளவு மண்ணைப்போட்டு 10-தடவை அலம்பின பிறகு இரண்டு கையையும் சேர்த்து 10-தடவை மண்போட்டு அலம்பி இரண்டு கால்களிலும் தனித்தனியே 4 தடவை மண்போட்டு அலம்பவேண்டும். நகங்களையும் அழுக்

கில்லாமல் சுத்திசெய்து முழங்கால் முழங்கைவரையில் கால்கைகளையும் சுத்திசெய்து சௌசம்பண்ணின இடத்தையும் ஜலத்தினால் அலம்பவேண்டும்.

கிழவிகளும் வியாதிக்கார ஸ்திரீகளும் பயப்படக்கூடிய ஸமயங்களிலும் முடிந்தவரையில் சௌசம் செய்யலாம். இரவில் பாதி சௌசம் செய்யவும்.

வாய் கோப்பளிப்பது.

பிறகு உட்கார்ந்து மூத்திரம் விட்டபொழுது 6-தடவையும், மலத்தை விட்டபொழுது 12-தடவையும் வாயைக் கொப்பளித்து ஷை ஜலத்தை இடது புறத்தில் உமிழவேண்டும். ஜலத்தில் உமிழக்கூடாது. ஜலத்தில் காறித்துப்புவது, கோழை, கபம் முதலிய அசுத்தங்களை துப்புவதும் கொடிதான பாபமாகும்.

பல் துலக்கல்,

கிழக்கு அல்லது வடக்கு முகமாகவாவது குந்திஉட்கார்ந்து வலது கையை முழங்கால்களுக்குள் வைத்துக்கொண்டு, பாலுள்ளமரத்தினுடையவாவது முள்ளுள்ள மரத்தினுடையவாவது குச்சிகளாலும், அல்லது மா, வேம்பு, நாவல், நாயுருவி முதலான குச்சிகளினுலாவது அவைகளின் இலைகளினுலாவது கீழ்வரிசைப் பற்களின் இடதுபுறமிருந்து ஆரம்பித்து பிரதக்ஷிணமாகவே வார்த்தை சொல்லாமல் தேய்க்கவேண்டும்.

தேவாலயம், பசுமாட்டுக் கொட்டில், ஜலத்தின்நடுவு, யாக பூமி, புஷ்பத் தோட்டம், சுடுகாடு முதலிய இடங்களில் பல் தேய்க்கக்கூடாது.

கூடாதவை.

அரசு, இலுப்பை, பனை, பாக்கு, தென்னை, குசம், நாணல், தர்பம், பலாசம், இலவை, ஈச்சை, செம்மறத்தை இவைகளின் குச்சி, இலைகளினுலும், மண், மணல், சாம்பல், செங்கல்களாலும் பல்லை தேய்க்கக்கூடாது.

கூடாத காலம்.

ஞாயிறு, செவ்வாய், வெள்ளி, சனி வாரங்களிலும், பிரதமை, ஷஷ்டி, அஷ்டமி, சதுர்த்தசி, பர்வம் 2, வ்யதீபாதம் இவைகளிலும், ஏகாதசி முதலான விருத தினங்களிலும் குச்சியினுல் பல் துலக்கக்கூடாது.

வே நிஷித்த தினங்களில் கீழ் தேய்க்கக்கூடியதாகச் சொல்லப்பட்ட மா முதலிய மரங்களுடைய இலைகளினால் தேய்க்கலாம். நாக்கைமட்டும் வழிக்கலாம்.

தான் சிரார்த்தம் செய்யும் தினத்தில் வே இலைகளினாலும் தேய்க்கக்கூடாது. சிரார்த்ததினத்திலும் தேய்க்க ஒன்றும் அகப்படாத காலத்திலும் 12 தடவை வாயைக் கொப்பளிக்க வேண்டும்.

பல் தேய்த்தபிறகு குச்சியை இரண்டாகப் பிளந்து ஒரு பாகத்தினால் நாக்கை வழித்து இரண்டு பாகத்தையும் அலம்பி தூர எறிந்துவிட்டு முன்போல 16 தடவை வாயை கொப்பளித்துவிட்டு இரண்டு தடவை ஆசமனம் செய்யவேண்டும். வாயை கொப்பளிக்கும்பொழுது ஆள்காட்டி விரலினால் பல்லை தேய்க்கக்கூடாது. கொப்பளிக்கும் ஜலத்தையும் சாப்பிடக் கூடாது.

ஸ்நான விதி.

சூரியன் உதயமானபிறகு, ஆசமனம் பண்ணிவிட்டு ஸ்நானத்திற்காக ஸங்கல்பித்துக் கொள்ளவேணும். **அஸ்மத் குரூப் யோகம : ஸ்வசேஷபூதேகமயா ஸ்வீயைஸ் ஸர்வ பரிச்சதை : வீதாதம் ப்ரீதமாத்மானம் தேவ : ப்றக்றமதேஸ்வயம்.** சுக்லாம் பறதறம் **விஷ்ணும்** யென்று தொடங்கி **திதி, வாரம், நக்ஷத்திரங்களைச்** சொல்லி **பகவத் கைங்கர்யரூபம் பறுதஸ்நானம்கறிஷ்யே** என்று சங்கல்பித்துக்கொண்டு, **கங்காயைநம : யமுநாயைநம : ஸறஸ்வத் யைநம : சேதவேநம:** யென்று **கங்கை** முதலான புண்ணிய தீர்த்தங்களை ஸ்நாநம் பண்ணும் தீர்த்தத்தில் ஆவாகனம் பண்ணி நமஸ்கரித்து தாந்திரிகமான அஷ்டாக்ஷரத்தை ஜபித்து நதிகளில் ப்ரவாகத்திற்கு எதிர் முகமாகவும், குளங்கள், கிணறுகளிலும் சூரியனுக்கு எதிர்முகமாகவும் ஸ்நாநம் பண்ணவேணும். பிறகு 2 தடவை ஆசமனம்பண்ணி உலர்ந்த வஸ்திரத்தினால் தேகத்தைத் துவட்டிக்கொண்டு இடுப்பில் வேறு வஸ்திரத்தையும் மேலே வேறு வஸ்திரத்தையும் தரிக்கவேண்டும்.

பிறகு காலை அலம்பி ஆசமனம்செய்யவேண்டும். சுமங்கலி ஸ்திரீகள் ஏகாதசி, துவாதசி, மாதப்பிறப்பு, கிரகணம், அமாவாஸ்யை, சிரார்த்த தினம், முதலிய தினங்களில் சிரஸ் ஸ்நானம் செய்யவேண்டும். ருதுகாலத்தில் முதல்நாள் இரவில் பர்த்தாவோடு ஸங்கமம் சேர்ந்தவள் மறுதினம் காலையில் அவசியம் சிரஸ் ஸ்நானம் செய்யவேண்டும். மற்றை தினங்களில் கழுத்தளவு குளித்துவிட்டு **ஹரி: ஹரி:** யென்று சொல்லி மஞ்சள் ஜலத்தை தலையில் ப்ரோக்ஷித்துக்கொண்டால் போரும்.

சிரார்த்தம், தீட்டு, மரணம், மாதப்பிறப்பு, ருதுஸ்நானம் இவைகளில் வெந்நீரினால் ஸ்நானம் செய்யக்கூடாது. வியாதிக்காரிகளும், கிழவிகளும், மிக சமயங்களிலும் வெந்நீரில் ஸ்நானம் செய்யலாம். இரவில், முதல் கடைசி யாமங்களில் ஆறு குளங்களில் ஸ்நானம் செய்யலாம்.

நடுயாமங்களில் ஸ்நானம் செய்யவேண்டியிருந்தால் ஓர் பிராமணனிடம் அனுமதிபெற்றுவது அல்லது அக்னியை யாவது கரையில் ஜ்வலிக்கும்படி செய்துவிட்டு ஸ்நானம் பண்ண வேண்டும்.

ஸ்நானத்திற்கு கூடாதஜலம்.

சண்டாளர்கள், பாதகிகள், மிலேச்சர்கள், நாஸ்திகர்கள் முதலானவர்கள் வெட்டின குளம், கிணறுகளில் ஸ்நானம் செய்யக் கூடாது. வேறு கதி இல்லாமல் மிக குளம் கிணறுகளில் ஸ்நானம்பண்ணும்படி நேர்ந்தால் குளத்திலிருந்து மூன்றுகை மண்ணையெடுத்து கரையில் போட்டுவிட்டாவது ஸ்நானம் செய்ய வேண்டும். விஷ்ணுபக்தைகளான ஸ்த்ரீகள் மற்றை தேவாலயத்தின் அருகிலுள்ள குளங்களில் ஸ்நானம் பண்ணக்கூடாது.

புண்ட்ர விதி.

பிறகு இடது உள்ளங்கையில் திருமண்ணைக்கரைத்து கேசவாய நம: என்று சொல்லி நெற்றியிலும் நாராயணாய நம: என்று நடுவயிற்றிலும், மாதவாய நம: என்று மார்பின் நடுவிலும் கோவிந்தாய நம: என்று கழுத்தின் நடுவிலும் விஷ்ணவே நம: என்று வயிற்றின் வலது புறத்திலும், மது சூதனாய நம: என்று வலது புஜத்திலும், த்ரிவிக்ரமாய நம: என்று வலது கழுத்திலும், வாமனாய நம: என்று வயற்றின் இடது புறத்திலும், ஸ்ரீதராய நம: என்று இடது புஜத்திலும் ஹ்ருஷீகேசாய நம: என்று இடது கழுத்திலும், பத்மனாபாய நம: என்று வயற்றின் பின்புறத்திலும், தாமோதராய நம: என்று பிடரியிலும் பகவானுடைய பாதம் போலவாவது அல்லது அர்த்த சந்திரன்போலவாவது ஊர்த்வ புண்டரங்களை தரித்துக்கொண்டு பிறகு ஸ்ரீசூர்ணத்தை கறைத்து மிக புண்ட்ரங்களின் நடுவில் முன் தரித்த வரிசையாகவே ஸ்ரீயை நம: அம்ருதோத்பவாயை நம: கமலாயை நம: சந்த்ரஸோதர்யை நம: விஷ்ணுபத்ன்யை நம: வைஷ்ணவ்யை நம: வரூரோகாயை நம: ஹரிவல்லபாயை நம: சார்ங்கிண்யை நம: தேவதேவிகாயை நம: சுரசுந்தர்யை நம: மஹாலக்ஷ்ம்யை நம: என்கிற மந்திரங்களைச் சொல்லி மூங்கில் இலைபோல் தரித்துக்கொள்ள வேண்டியது.

த்யான ஸ்லோகம்

பிறகு சதுச்சக்ரம் நமஸ்யாமி கேசவம் கனகப்ரபம், நாரா யணம் கருச்யாமம் சதுச்சங்கம் நமாம்யகம், மாதவம் மணி பங்காபம் சிந்தயாமி சதுர்க்கதம், சந்த்ரபாலம் சதுச்சார்ங்கம் கோவிந்தம பிலம்ச்ரயே, விஷ்ணும் சதுர்ஹலம்வந்தே பத்ம கிஞ்சல்க ஸன்னிபம், சதுர்முசலமப்ஜாபம் ஸம்ச்ரயே மது சூதனம், ஆச்ரயாமிசது: கட்கமக்னிவர்னம் த்ருவிக்ரமம், வாம னம் பாலசூர்யாபம் சதுர்வச்ரம் விபாவயே, ஸ்ரீதரம் புண்டரீ காபம் சது: பட்டஸமாச்ரயே, சதுர் முத்கரமப்யேமி ஹ்ருஷீ கேசம் தடித்ப்ரபம், பஞ்சாயுதம் பத்மஜபம் ப்ரணமாம்யர்க்க ரோசிஷம், தாமோதரம் சதுஷ்பாசமிந்த்ர கோபநிபம் பஜே.

யென்கிற ஸ்லோகங்களைச் சொல்லி அந்தந்த இடங்களில் **கேசவாதி** மூர்த்திகளை அந்தந்த ரூபத்தோடு த்யானித்து **ஸ்ரீயை நம:** யென்று துடங்கி அந்தந்த இடங்களில் மகாலக்ஷ்மி யைத் தியானிக்க வேண்டியது.

பிறகு பகவானைத்துடங்கி தன் னுடைய ஆசார்யன் வரையில் தனியன்களை அநுசந்தித்து* அஷ்டாக்ஷரமந்திரத்தின் த்யானச் லோகத்தை அனுசந்தித்து பகவானைத்தியானம் செய்துகொண்டு ப்ரணவமில்லாமல் தாந்திரிகமான திருவஷ்டாக்ஷர மந்திரத்தை யதாசக்தி ஜபிக்கவேண்டியது. ஷை ஜபம் செய்யும்பொழுது ருஷி, சந்தஸ், தேவதை, அங்கந்யாஸம் முதலியவைகளை ஸ்த்ரீ கள் செய்யக்கூடாது.

த்யவம் சரமச்லோகத்தையும் அந்தந்த த்யான ச்லோகத் தைச் சொல்லிக்கொண்டு ஜபிக்கவேண்டும்.

அர்க்யம்.

பிறகு **சூர்யாய நம:** யென்று சொல்லி இரு கைகளினலும் ஜலத்தை யெடுத்து சூரியமண்டலத்திலிருக்கும் பகவானைக் குறித்து அர்க்யம் கொடுக்கவேண்டும்.

அக்னி பூஜை.

பிறகு ஔபாஸநாக்னியிலிருக்கும் சாம்பலை தள்ளிவிட்டு முட்டான் உமி முதலியவைகளினல் அக்னியை ஜ்வலிக்கும்படி செய்து புஷ்பம் அக்ஷதை இவைகளினல் அக்னியை அர்ச்சித்து 2, 4, 6, 8 இம்மாதிரி இரட்டைப் படையாகவே பஞ்சாங்க நமஸ்காரங்களைச்செய்யவேண்டும்.

---

* அஷ்டாக்ஷர மந்திரம் ஷை த்யானச்லோகம் ஆசாரியனிடத்தில் அர்த்தத்துடன் உபதேசித்துக்கொள்ளவேண்டியது.

இரண்டு கால் பெருவிரல்களினாலும், இரண்டு முழங்கால் களினாலும், தலையினாலும் பூமியைத்தொட்டு இரண்டுகையையும் கூப்புவது பஞ்சாங்க நமஸ்காரம்.

பர்த்தா ஔபாஸனம் பண்ணவருங்காலத்தில் அதற்கு வேண்டிய காரியங்களைச் செய்யவேண்டும்.

பகவத் வந்தனம்.

பிறகு தனது கிரகத்திலிருக்கிற பகவானுடைய ஸன்னிதிக்குப்போய் அவ்விடத்தைப் பெருக்கி மெழுகி கோலமிட்டு ஆராதனத்திற்குவேண்டிய பாத்திரங்களை சுத்திசெய்து புஷ்பம் சந்தனம் முதலிய பூஜாத்திரவியங்களைச்சேகரித்து வைத்து நெய் அல்லது எள்ளு தேங்காய்யெண்ணெயினல் தீபம் ஸமர்ப்பிவித்து இரட்டைப்படையாக ப்ரதக்ஷிணம் நமஸ்காரங் களைப் பண்ணி தனது குழந்தைகளையும் கால்கைகளைச்சுத்தி செய்து ஈர வஸ்திரத்தினல் தேகத்தை அழுக்கில்லாமல் துடைத்து பகவானை நமஸ்கரிக்கச்செய்து உமதடிமைகளான அடியோங்களை கிருபையோடு கடாக்ஷித்தருளவேண்டுமென்று பிரார்த்திக்கவேண்டும்.

பிறகு மாமியார், மாமனர், பர்த்தா, தாய், தகப்பன், ஆசார் யன் முதலான பெரியோர்களையும் முன்போலவே நமஸ்கரிக்க வேண்டும்.

பாகாரம்பம்.

காய்கரிகளை சுத்தமான ஜலத்தினல் அலம்பி, பூச்சி புழு இருக்கும் பாகத்தை தூரயெறிந்துவிட்டு சுத்தமான பாகங்களை அரிவாள்மணையினல் நறுக்கிவைத்துக்கொண்டு அரிசியையும் புழுக்களில்லாமல் புடைத்துவைக்கவேண்டும்.

ஜலசுத்தி.

ஜலத்தை பரிசுத்தமான வஸ்திரத்தினல் மூன்றுதடவை வடிக்கட்டி கால்கை சுத்தம் செய்வதற்கும் பாகம் செய்வதற்கும் ஆராதனத்திற்கும் வெவ்வேறு பாத்திரங்களில் வைத்துக் கொள்ளவேண்டும்.

பாத்திரங்களின் சுத்தி.

தங்கம், வெள்ளி, செம்பு, பித்தளை முதலான உலோகங்கள் யெந்த யெந்த வஸ்துக்களினல் அழுக்கில்லாமல் பிரகாசத்தை அடையுமோ அந்தந்த வஸ்துக்களினல் அந்தந்த பாத்திரங்களை சுத்தி செய்யவேண்டும். அதாவது வெள்ளிப்பாத்திரங்களை சுண்ணும்பினலும் தாமரம் பித்தளைப் பாத்திரங்களை புளியினல

லும், வெண்கலத்தை சாம்பலினலும் இவைபோல் மற்றவை களையும் மற்ற சுத்தமாகக்கூடிய வஸ்துக்களினலும் சுத்தி செய்யவும். சுத்தி செய்யும்பொழுது கேசவாய நம: யென்பது முதலான மந்திரங்களைச்சொல்லி சுத்திசெய்யவேண்டும். அசுத்தியின் தாரதம்யத்திற்குத் தகுந்தபடி புளி முதலியவை களினல் தேய்க்கவேண்டிய தடவைகள் அதிகமாகவும் குறைச்ச லாகவும் ஸம்பவிக்கும்.

தங்கம் வெள்ளி பாத்திரங்கள் ஜலத்தினல் அலம்புவதா லும் இரும்பு, ஈயம், மண் இவைகள் நெருப்பிற் காய்ச்சுவதா லும் சுத்தங்களாகும்.

கல்லுபாத்திரங்களை சாம்பலையும் மண்ணையும் ஜலத்தில் கறைத்து அலம்பி சுத்திசெய்யவேண்டும். மண் பாத்திரங் களில் பாகம் செய்தால் ஒரு மாதத்திற்குப் பிறகு அந்தப் பாண் டங்களை உபயோகப்படுத்தக் கூடாது. முதல்நாள் பாகம்செய்த மண்பாத்திரத்தை சுத்தமாக தேய்த்து வெய்யலில்வைத்து நெருப்பில் காய்ச்சினபிறகு மறுதினம் பாகத்திற்கு உபயோகப் படுத்தவேண்டும்.

சண்டாளன் தொட்டதும், எச்சில்பட்டதுமான மண் பாண் டங்களை உபயோகப்படுத்தக்கூடாது. எரிந்துவிடவேண்டும்.

பகவானுடைய பூஜைப் பாத்திரங்களை மனிதன் காரியங் களுக்கு உபயோகப்படுத்தவும், மனிதன் உபயோகப்படுத்தின பாத்திரங்களை பகவானுடைய பூஜைக்கு உபயோகப்படுத்தவும் கூடாது.

நாய், காக்காய், மாடு, இவை முதலியவைகளால் மோந்து பார்க்கப்பட்ட பாத்திரங்களையும், சூத்திரனல் தொடப்பட்ட பாத்திரங்களையும், உப்புக் கலந்த ஜலத்தினல் 10-தடவை அலம்ப வேண்டும்.

தானியம், முறம், சல்லடை, கயறு, கோறைப்பாய் முதலிய வைகளை ஜலத்தினல் ப்ரோக்ஷித்தால் சுத்தமாகும். பட்டுவஸ்திரம், கம்பளம், மெத்தை, தலைகாணி முதலியவைகளை வெய்யலில் காய வைத்து ஜலத்தினல் ப்ரோக்ஷித்தால் சுத்தமாகும். இவைகளில் அசுத்தங்கள் கறைபட்டு அது போகாமலிருந்தால் உப்புமண்ணை ஜலத்தில் கறைத்து அலம்பவேண்டும்.

வஸ்திரம் தீட்டுப்பட்டால் நீனத்துவிடவேண்டும். நீனக்க முடியாத வஸ்திரமூட்டைகள் தீட்டுப்பட்டால், தீட்டுப்பட்ட

இடத்தைமட்டும் ஜலத்தினல் கணத்து மற்ற இடத்தை ஜலத்தினல் ப்ரோக்ஷிக்கவேண்டும்.

மற்றும் சாஸ்திரங்களை அறிந்த பெரியோர்களுடைய ஆசாரங்களையும் அனுசரித்தும் முன்சொல்லியபடி வஸ்துக்கள் கெட்டுப்போகாதபடி சுத்திசெய்யவேண்டும்.

அக்னி.

பர்த்தா ஔபாஸனம் செய்தவுடன் அந்த அக்னியை அடுப்பில் சேர்த்து அதினுலேயே பாகம் செய்யவேண்டும். ஔபாஸனம் செய்யாவிட்டால் பாகம்பண்ணுவதற்காக அக்கினியை கும்மட்டி முதலான இடத்தில் அவசியம் சேகரித்துவைக்கவேண்டியது. பிறருடைய வீட்டிலிருந்து அக்கினியை வாங்கிவந்து பாகம்பண்ணினல், அதனல் செய்யப்படும் பகவானுடைய ஆராதனம், அதிதி பூஜை முதலான புண்ணிய காரியங்களின் பலம் நெருப்புக் கொடுத்தவர்களுக்குப் போய்விடும். ஆகையினல் பிறர் வீட்டு அக்கினியை வாங்கக்கூடாது. வேறு வழியில்லாவிட்டால் ஞானிகள் அல்லது தார்மிகர்கள் வீட்டிலிருந்து அக்கினியை வாங்கிவந்து அதினல் பாகம்பண்ணவேண்டும்.

கூடாத விறகுகள்.

பலாசம், வில்வம், அரசு, கோவிதாரம், விபீதகம், மரீசி, பனைமரம், ஊமத்தை, பாரிஜாதம், கடுக்காய், ஆமணக்கு, கறஞ்சம், இலவம், வாகை, எருக்கு, எள்ளு, விஷமரம், முள்ளுள்ள மரம், புகையும்மரம், துர்க்கந்தமுள்ள மரம் இவைகளின் விறகுகளினல் பாகம் செய்யக்கூடாது. மற்றை விறகுகளினல் செய்யலாம்.

பாக ஸங்கல்பம்.

கிழக்கு அல்லது வடக்கு முகமாகவே இருந்து பாகத்தைப் பண்ணவேண்டும். பாகத்தை ஆரம்பிக்கும்பொழுதே பகவானுடைய ஆராதனத்திற்காகவே சமயல்பண்ணுகிறோம் யென்கிற நிச்சயத்தோடு ஆரம்பிக்கவேண்டும்.

அங்க சுத்தி.

பாகம்பண்ணும்பொழுது கண்ஜலம், மூக்குஜலம், வேர்வை முதலிய அசுத்தங்களைத்தொட்டாலும், இடுப்புக்குக் கீழ் அங்கங்களைத்தொட்டாலும் உடனே கையை அலம்பவேண்டும்.

பாகம்.

பக்குவமாகாதது ருத்திரனுக்கு இஷ்டமாகும். அக்னியில் சுட்டது அசுரர்களுக்கு இஷ்டமாகும். நன்றாக பக்குவமானதே தேவர்களுக்கு இஷ்டமாகும். ஆகையினால், வஸ்துக்களை நன்றாக பக்குவம்பண்ணவேண்டும்.

கூடாத வஸ்துக்கள்.

ஆகார நியமம் முதலிய கிரந்தங்களில் நிஷேதிக்கப்பட்டவைகளும், இது சாஸ்திர நிஷித்தமா அல்லவா யென்று ஸந்தேகிக்கப்பட்டவைகளும் பாகம் செய்யக்கூடாதவை.

தினம் செய்யக்கூடாதவை.

வடை, அதிரஸம் முதலிய பக்ஷணங்களையும், பாயஸம் பொங்கல் முதலிய உயர்ந்த ஆகாரங்களையும், கல்யாணகாலம், அதிதிகள், பந்துக்கள் வந்தகாலம், சிறார்த்தகாலம் முதலிய காலங்களைத்தவிர, மற்றை தினங்களில் செய்யக்கூடாது. தளிகைசெய்த காலத்தில் வேர்வையினால் நனைந்த வஸ்திரத்தைவிட்டு வேறு வஸ்திரத்தைத்தரித்து கால் கைகளை அலம்பி ஆசமனம் செய்து கொண்டு ஆராதன காலத்தில் வேண்டிய உபசாரங்களைச் செய்யவேண்டும்.

பகவதாராதனம்.

சுமங்கலியான ஸ்திரீகள் தனித்து பகவதாராதனம் செய்யக்கூடாது. தனது பர்த்தா ஆராதனம் செய்யும்பொழுது ஆராதனத்துக்குவேண்டிய சந்தனம், புஷ்பம், தூபம், தீபம், தளிகை, தாம்பூலம் முதலான வஸ்துக்களை அந்தந்த சமயங்களில் பக்தியோடு கொடுப்பதும், பகவத்ஸன்னிதியை சுத்திசெய்து அலங்கரிப்பதும், மற்றும் பக்தியோடு பகவானை ஸ்துதிப்பதும், கானம் செய்வது முதலியதே அவர்களுக்கு ஆராதனமாகும். ஸ்த்ரீகள் ஸாளக்கிராமங்களைத்தொடக்கூடாது. பகவத் ஸன்னிதியில் உடுத்திக் கழித்த பழைய வஸ்திரங்களினால் தீபத்திற்கு திரிபோடுவதும், ஆமணக்கு பின்னை எண்ணையினால் விளக்கேற்றுவதும், அசுத்தங்களான தீபம், தூபம் முதலியவைகளை ஸமர்ப்பிப்பதும் கூடாது.

அன்னவ்யஞ்சனங்களை அடுப்பில் வைத்து காய்ச்சின பாத்திரங்களில் ஸமர்ப்பிக்கக்கூடாது. வேறு சுத்தமான பாத்திரத்தில் ஸமர்ப்பிக்கவேண்டும்.

வைச்வ தேவம்.

தினந்தோறும் அடுப்பில்வைக்கப்படும் விறகுகளுக்குள் ளிருச்சும் எறும்பு புழுக்களை எறிச்துவிடுவதாலும், ஜலங்களில் நமது கண்ணுக்குத் தெரியாத புழுக்களை வேகவைத்து சாப்பிடுவ தாலும், உயிருள்ள கீறை முதலிய கறிகளைப் பிடுங்கி துண்டந் துண்டமாக வெட்டுவதினாலும், குப்பைகளைப்பெருக்கும்பொழுது விளக்கமாறினால் பல பூச்சிகளைக் கொல்லுவதினாலும், உரலில் அரிசி முதலானவைகளைக் குத்துங்காலத்தில் பல ஜந்துக்களையும் கொல்லுவதினாலும், ஐந்துவிதமான பிராணிகளுடைய ஹிம்சை களை அவசியம் செய்தே தீரவேண்டியதாக ஸம்பவிக்கிறது. அதற்கு பிராய்ச்சித்தமாக பஞ்சமகாயக்ஞங்களை அவசியம் செய்ய வேண்டும். செய்யாவிட்டால் ஷை பாபம் போகாது. ஆகையினால், ஷை பஞ்சமகாயக்ஞங்களை பர்த்தா செய்யும்பொழுது பலி ஹரணம் முதலியவைகளைச்செய்து, பிறகு ஹோமம் செய்த அக்னியை குண்டத்தில் ரக்ஷித்துவைக்கவேண்டும்.

பிக்ஷை.

ஸன்யாஸிகள் பிக்ஷைகேட்டால், கால் அலம்ப ஜலங்கொ டுத்து, கையிலும் ஜலத்தைவிட்டு, அன்னம் வ்யஞ்சனங்களை பாத்திரத்தினால் சிக்யத்தில் பொகட்டு பிறகும் அவர் கையில் ஜலம் கொடுக்கவேண்டும்.

பிரம்மசாரிகள் பிக்ஷைகேட்டாலும், அப்படியே பிக்ஷை பொகட்டு, பின்பு கையில் ஜலங்கொடாமலிருக்கவேண்டும். பிறகு அதிதிகள், விருத்தர்கள், ரோகிகள், சிறுவர்கள் முதலியவர்களுக்கு ஆகாரமிட்டு, பர்த்தாவுக்கு ஆகாரம் போடவேண்டும். ஷை ஆகாரங்களை சிறத்தையோடும், பக்ஷபாதமில்லாமலும், கோப வார்த்தைகளில்லாமலும் கொடுக்கவேண்டும்.

போஜன விதி.

பிறகு சாப்பிடக்கூடிய இடத்தில் பர்த்தா முதலியவர்கள் உட்கார்ந்தபிறகு கோமய ஜலத்தினால் 4 மூலையாக ஸ்தலத்தை இடைவிடாமல் சுத்திசெய்து, தங்கம், வெள்ளி, வெண்கலம் இவற்றினால் செய்யப்பட்ட பாத்திரத்திலாவது அல்லது பிலா, மா, நாவல், தென்னை, பலாசம், வாழை, தாமரை, பேயத்தி, உஹீநா, காஞ்சி முதலிய இலைகளிலாவது அன்னத்தை கரண்டி யினால் பரிமாறவேண்டும்.

K20490

கூடாத பாத்திரம்.

ஆல், அரசு, அத்தி, எருக்கு இலைகளிலும்; கல்லிலும், வஸ்திரத்திலும், கையிலும், மண்பாத்திரத்திலும், வாழை, தாமரை இலையிலும், இலையின் பின்புறத்திலும், தேவபாத்திரங்களிலும், இரும்பு பாத்திரங்களிலும் சாப்பிடக்கூடாது. தங்கம், வெள்ளி, வெண்கலமானலும், ஒருவர் சாப்பிட்டபாத்திரத்தில் மற்றொருவர் சாப்பிடக்கூடாது.

பறிமாறும் விதி.

முதலில் அன்னத்தையும், நெய்பையும் பறிமாறி, புருஷர்கள் பறிசேஷனம், ஆபோசனம், ப்ருணகுகி செய்தபிறகு உப்பு சம்பந்தமான பதார்த்தங்களைப் பறிமாறவேண்டும். ஸ்த்ரீகள் பறிஷேசனம் ஆபோசனம் ப்ருணகுதிகள் செய்யக்கூடாது.

அக்னியில் பக்குவம்பண்ணுத பழம், ஊருகாய் முதலியவைகளையும், நெய் தைலத்தில் பக்குவம்பண்ணின வடை முதலியவைகளையும் கையினுலேயே பறிமாறவேண்டும். அக்னியில் பக்குவமான வஸ்துக்களையும திரவமான நெய், எண்ணை, ரஸம் முதலியவைகளையும் கறண்டியினுலேயே பறிமாறவேண்டும். இரும்புக் கரண்டியினுலோ ஷி பாத்திரத்தினுலோ ஒன்றையும் பறிமாறக் கூடாது. உப்பைச் சாப்பிடுகிறவர்கள் கண்ணுக்குத்தெரியும்படி பறிமாறக்கூடாது. சோற்றில் மறைத்தாவது மோர் முதலியதில் கறைத்தாவது சேர்க்கவேண்டும்.

பர்த்தா சாப்பிட்டபிறகு உத்தரபோசனம் கொடுத்து கை கால்கள் சுத்தி செய்ய ஜலங்கொடுத்து ஆசமனம் செய்தபிறகு தாம்பூலமுங்கொடுத்து, பிறகு, சுமங்கலியானவர்கள் கால் கைகளைச் சுத்திசெய்து, இரண்டு தடவை ஆசமனம்செய்து கீழ்ச் சொன்ன நியமங்களுடன் சாப்பிடவேண்டும.

போஜன நியமம்.

சாப்பிடும்பொழுது கோவிந்த என்று சொல்லிக்கொண்டு சாப்பிடவேண்டும். சாப்பிடவேண்டிய பதார்த்தங்களை கேட்பது தவிர, வேறு வம்புவார்த்தைகளை சொல்லக்கூடாது. ரஸம் மோர் முதலியவைகளை தொன்னை இல்லாமல் கையில் வாங்கி சாப்பிடுவதும், காலை நீட்டிக்கொள்வதும் சாப்பிடுகிற கையை மூழங்காலின்மேல் வைத்துக்கொள்வதும், இடது கையை கீழே ஊன்றிக் கொள்வதும், அழுவது, சிறிப்பது, சண்டைசெய்வது, நெடுங்காலமிருந்து சாப்பிடுவது, குழந்தைகளுக்கு இலைசோற்றை யெடுத்துக் கொடுப்பது முதலான நிஷித்தங்களைச் செய்யக்கூடாது.

இடதுகைப் பக்கத்தில் ஜலபாத்திரத்தை வைத்துக்கொள்ளக் கூடாது. இடது கையினால் ஒன்றையும் சாப்பிடக் கூடாது. போஜனகாலத்தில் இடது கையிலிருக்கும் பாத்திரத்தினால் ஜலத்தை சாப்பிடலாம். ஒருதடவை சாப்பிட்டு மிகுந்த ஜலத்தை மறுபடி சாப்பிடக்கூடாது. கிடைக்காதபக்ஷத்தில் கொஞ்சம் பூமியில் கொட்டிவிட்டு பாக்கியை சாப்பிடலாம்.

பர்த்தா, ஆசாரியன், தகப்பன், மூத்த தமையன் இவர்களுடைய யெச்சில் தவிர, மற்ற ஒருவருடைய யெச்சிலையும் சாப்பிடக்கூடாது.

சாப்பிட்ட பிறகு கையை சுத்தமாக அலம்பி 16 தடவை வாயை கொப்பளித்து காலையும் நன்றாக அலம்பி ஆசமனம் செய்யவேண்டும்.

பிறகு அவசியமான வீட்டு வேலைகளைச் செய்துவிட்டு வேதங்கள் ருஷிவாக்யங்கள் தவிர மற்ற கிரந்தங்களினால் பகவத்குணங்களை அனுஸந்திக்கவும, பர்த்தா முதலான பெரியோர்களிடம் ஞானம், பக்தி, வைராக்யம் இவைகளை கொடுக்கக்கூடிய விஷயங்களை கேட்கவும், சக்தி இருந்தால் சாதுக்களான மற்ற ஸ்த்ரீகளுக்கு யேகாந்தமாக நல்ல விஷயங்களை உபதேசிக்கவும் செய்யலாம்.

நிஷித்தங்கள்.

பகலில் தூங்குவது, பிறர் வீட்டில் வம்பு பேசுவது, பர்த்தாவையோ அல்லது மற்றவரையோ தூஷிப்பது மற்றும் பதிவிரதைக்கிபொருந்தாத கதைகளைபடிப்பது, சூதாடுவது முதலான காரியங்களை செய்யக்கூடாது.

பரிஜன ரக்ஷணம்.

தன்வீட்டுக்கு வந்த நாட்டுப்பெண்களை எந்த காரணத்தினாலாவது கஷ்டப்படுத்தினால் சூன்யம் வைத்த வீட்டிற்போல அவ்வீட்டிலும் பலவித துன்பங்களுண்டாகி குடும்பம் நாசமடைந்துவிடும்.

ஆகையினால், நாட்டுப்பெண்களையும் தன்னைப்போலவே ஆடையாபரணங்களினாலும் அன்னபானங்களினாலும் பக்ஷபாதமில்லாமல் உபசரித்து பிரியமாகவே வைத்துக்கொள்ளவேண்டும்.

ஆகாரமிடுவதிலும், வேலைக்காரர்களுக்கும், மற்றை பந்துக்களுக்கும், தனக்கும, குழந்தைகளுக்கும், ஒருவருக்கு நல்லதாகவும், மற்றொருவருக்கு கெட்டதாகவும், பக்ஷபாதமாக ஆகாரம் கொடுப்பதும் மகாபாதகம்.

சாயங்கால காரியங்கள்.

சாயங்காலத்தில் வீட்டை சுத்திசெய்து பகவானுடைய ஸன்னிதியையும் மெழுகி கோலமிட்டு, விளக்கேற்றி வைத்து, மகாலக்ஷ்மியையும் பகவானையும் தோத்திரங்களினால் கானத்தோடு ஸ்துதித்து, மாமியார், மாமனார், பர்த்தா, மற்றும் பெரியோர்களை நமஸ்கரித்து, காலையில்போல ஔபாஸநாக்னியை மூட்டி பூஜிக்கவேண்டும்.

ஆலயம் போவது.

தன் பர்த்தா, தேவாலயத்திற்காவது, உத்ஸவத்திற்காவது, பகவானை ஸேவிக்கப்போனால் தானும் கூடப்போய், தேவாலயத்தில் துப்புவது, தூங்குவது, வம்புபேசுவது, அபானவாயு விடுவது முதலான வபசாரங்களைச் செய்யாமல் கூட்டங்களில்போகாமல், தோத்திரங்களைச் சொல்லிக்கொண்டு ஆலயத்துள் பிரவேசித்து, த்வஜஸ்தம்பத்தினடியில் கூர்மாதீன் யென்கிற சுலோகத்தைச்சொல்லிநமஸ்கரித்து,ப்ரகாரத்தில் 4-மூலையிலும்ஸேவித்து, பிறகு விஷ்வக்ஸேநர், துவாரபாலகர்களையும் நமஸ்கரித்து, பகவானையும் வலதுபுறத்தில் ஸேவித்து, பகவானுடைய திருமேனியை திருவடிமுதல் திருமுடி வரையில் ஒவ்வொரு அங்கங்களும் நெஞ்சில்ஸ்திரமாகநிற்கும்படி அனுபவித்து, ஸ்தோத்திரங்களினால் ஸ்துதித்து கிருதார்த்தமான மனதுடன், தீர்த்தம், சடகோபன், துளசீ, புஷ்பங்கள் முதலியவைகளை புருஷார்த்தங்களாகப்பெற்று, பின்புறம் காட்டாமல் வெளியே வந்து ஸன்னிதியில் ஓரிடத்தி லுட்கார்ந்து, முடிந்தவரையில் திருவஷ்டாக்ஷரத்தை ஜபித்து நமஸ்கரித்து, அடியேன் செய்த வபசாரங்களை யெல்லாவற்றையும் க்ஷமித்தருள வேண்டு மென்று பிரார்த்தித்து, 2, 4 பிரதக்ஷிணங்களைப்பண்ணி விஸ்வக்ஸேநரை ஸேவித்து விடைபெற்று, பர்த்தாவுடன் வீட்டிற்குவந்து பாகம்செய்து, பர்த்தாவைக் கொண்டு பகவானுக்கு நிவேதனம் செய்வித்து, சந்தியாகாலத்திற்குப் பிறகு பர்த்தா சாப்பிட்ட பிற்பாடு முன்சொன்ன நியமங்களுடன் ஸ்தீரிகள் சாப்பிடவேண்டும்.

சாயங்காலவேளையில் வந்த அதிதிகளை யதாசக்தி அவசியம் உபசரிக்கவேண்டும். அவன் பட்டினியாக இருக்கக்கூடாது. மற்றும் பர்த்தா சொல்லுகிற ஸர்வ காரியங்களையும் ஆக்ஷேபிக்காமல் அவசியம் பிரியமாகச் செய்வதோடு பர்த்தாவையே தனக்கு தேவதையாகவும், ஸர்வவித பந்துவாகவும் நினைத்து பக்தியோடு பூஜிக்கவேண்டும்.

சயநம்.

பர்த்தா படுத்துத் தூங்கினபிறகு தானும் படுத்துறங்க வேண்டும். கோயில்களிலும், நாச்சந்தியிலும், பாழ்வீட்டிலும், சுடுகாட்டிலும், மற்றும் ஆசாரமில்லாத ஸ்தலங்களிலும், தேவதை, ஆசாரியன் பெரியோர்கள், பசு, தான்யம் இவைகள் கீழே இருக்க உயர்ந்த ஸ்தானத்திலும் இவைகளே தன் கால்புறமாக வைத்தும் படுத்துத் தூங்கக்கூடாது. ஈர வஸ்திரத்துடனும், வஸ்திரமில்லாமலும், விருதமில்லாத காலத்தில் தர்பத்தின் மேலும், வடக்கே தலையை வைத்தும் படுத்துறங்கக்கூடாது.

ஸங்கமம்.

பகவானுக்கு ஸமர்ப்பிவித்த சந்தனம், புஷ்பம், தாம்பூலங்களை பர்த்தாவுக்கு கொடுத்து தானுமணிந்து, பர்த்தா சிரமத்துடனிருந்தால் கால் பிடிப்பது, விசிறியினல் வீசுவது முதலிய சிசுரூஷைகளைச்செய்து, ருதுகாலத்தில் நிஷித்தங்களல்லாத தினங்களில் இருவரும் வியாதி இல்லாத காலத்தில் ஸங்கமத்தை அடையவேண்டும்.

கூடாத காலம்.

ஸ்திரீகளுக்கு ரஜஸ் உண்டானதினம் முதல் 16-தினங்கள் ருது காலங்கள் யென்று சொல்லப்படும். அவற்றுள், முதல் 3 தினங்கள் வெளியில் வசிக்கவேண்டும். 4 வது தினத்திலும் ஸங்கமம் செய்யக்கூடாது. பாக்கி 12 தினங்களிலும் ஷஷ்டி, அஷ்டமி, சதுர்த்தசி, அமாவாசை, பூர்ணிமை, மாதப்பிறப்பு, வ்யதீபாதம், பிறந்த நக்ஷத்திரம், தான் சிராத்தம்பண்ணினதினம், ஏகாதசி முதலான விருததினங்கள், பகல், நடுநிசி, ஸந்த்யைகள் இந்த காலங்களில் ஸங்கமம் செய்யக்கூடாது. பர்த்தா, பத்னிகள் நெடுங்காலம் பிரிந்திருந்துவந்த தினங்கள் கீழ்ச்சொல்லப்பட்ட தினங்களாக இருந்தால் ஸங்கமத்திற்கு நிஷேதமில்லை. ஓரிரவில் இரண்டு தடவை ஸங்கமம் செய்யக்கூடாது.

ஷை நியமங்கள்.

ஸங்கமகாலத்தில் பர்த்தாவைத் தவிர வேறொருவரை நினைக்கக்கூடாது. இருவரும் மௌனமாகவே இருக்கவேண்டும். ஸங்கமத்திற்குப் பிறகு, வேறுபடுக்கையில் படுக்கவேண்டும். ஸங்கம காலத்தில் உடுத்தின வஸ்திரத்தை உடுத்திகொண்டு, வைதிக காரியங்களைச் செய்யக்கூடாது. கற்பிணி 8 மாதத்திற்குப் பிறகு

ஸங்கமம் செய்யக்கூடாது. ஸங்கமத்திற்குப் பிறகு 2 தடவை மண்ணே போட்டு ஸௌசம் செய்து, கால் கைகளே அலம்பி வேறு வஸ்திரம் தரித்து, உலர்ந்த வஸ்திரத்தினுல் கால் கைகளே துடைத்துக்கொண்டு வேறு படுக்கையில் படுத்துறங்க வேண்டியது. ஸ்திரீயானவள் ஸௌக்கியமாக இருக்கும் காலத்தில் பர்த்தா கூப்பிட்டு ஸங்கமத்திற்கு இணங்காமலிருப்பதும், ருது உண்டாக மருந்து சாப்பிடுவதும், கற்பத்தை அழிப்பதும் கொடியதான பாதகமாகும்.

ஸ்வப்நம்.

தூங்கும் காலத்தில் கெட்ட ஸ்வப்நங்களேக் கண்டால் யெழுந்திருந்து 2 தடவை ஆசமனம்செய்து பகவானே நமஸ்கரித்து பகவானுடைய நாமங்களே கீர்த்தனம் செய்யவேண்டும்.

ருதுகால தர்மம்.

முன்பின் ஸந்த்யா காலங்கள் தவிர, இராத்திரி காலத்தை மூன்றுபாகமாக்கி மூன்றுவது பாகத்தில் ருதுவானுல், மறுதினம் முதல் 3-தினங்கள் விலகி இருக்கவேண்டும். அதற்கு முந்தியானுல், மேல் 2-தினங்கள் விலகி இருக்கவும்.

ருதுவான ஸ்திரீயானவள் யெந்த வஸ்திரத்துடன் ருதுவானுளோ அதே வஸ்திரத்தை மூன்றுதினங்களிலும் தரித்திருக்கவேண்டும். ஷை தினங்களிலும் பல்துலக்குவது, ஸ்நாநம் செய்வது, எண்ணே தேய்த்துக்கொள்வது, சந்தனம் புஷ்பங்களே தரிப்பது, தாம்பூலம் போடுவது, தலேயை அலங்கரிப்பது, நகத்தை அறுப்பது, மற்றொரு ருதுவானஸ்திரீயைத் தொடுவது, பேசுவது, பலாச இலேயில் சாப்பிடுவது, புருஷனோடு ஸங்கமம் செய்வது, ஆறுதாண்டி போவது, நமஸ்கரிப்பது, மந்திரங்களே ஜெபிப்பது, பகலில் தூங்குவது, பகவானுக்கு நிவேதனம்செய்த அன்னத்தை புஜிப்பது, மற்றும் வீட்டுவேலேகளேச் செய்வது முதலியவைகளேச் செய்யக்கூடாது.

ருதுவானஸ்திரீ மூன்று தினங்களிலும் படுத்திருந்த இடம் மண்தரையாகவிருந்தால் 4 விரலாழம் அந்த மண்ணே யெடுத்து விட்டு வேறு மண்ணேப் போடவேண்டும்.

ஸ்நாநம்.

4-வதுதினம்காலேயில் ருதுவான வஸ்திரத்தை வண்ணுனிடம்

கொடுக்கவாவது, அல்லது உப்புஜலத்திலாவது போட்டு வேக வைத்து தோய்க்கவேண்டும்.

4-வது தினம் காலையில் கால்கள், கைகள், குஹ்யஸ்தலங்களையும் 32 தடவை மண்ணைப்போட்டு அலம்பவேண்டும். நகங்களையும் சுத்திசெய்து, 32 தடவை வாயைக் கொப்பளிக்கவேண்டும். சூரியன் உதயமாகி 6-நாழிகைக்குப் பிறகு மாவிலை முதலியனவால் பல்லைத் தேய்த்துவிட்டு, சீயக்காய், நெல்லிக்காய் முதலியனவால் தேகத்தைதேய்த்து, பாத்திரத்தினுல் ஜலத்தையெடுத்து கறையிலிருந்து தேகத்தை அலம்பிவிட்டு, ஜலத்தில் இறங்கி ஒரே மூச்சில் 32 தடவை முழுகிவிட்டு தலையை துடைத்து அக்காலத்தில் உபயோகப்படுத்தின பாத்திரங்களையும் புளி மண் சாம்பல்களினுல் 32 தடவை சுத்திசெய்து, வஸ்திரங்களையும் 32 தடவை நனைத்து, மறுபடியும் 32 தடவை ஸ்நானம் செய்யவேண்டும்.

பிறகு, தலை தேகங்களை துவட்டிக்கொண்டு தன் பர்த்தாவையே மனதினுல் நினைத்துக்கொண்டு வேறு புருஷனைப் பார்க்காமல் வீட்டிற்குவாவேண்டும். வழியில் வேறுபுருஷனைப்பார்த்துவிட்டால், சூரியனைப் பார்க்கவேண்டும். ஸ்திரீகள் ஸ்நானம் பண்ணின தினத்தில் சிறுசூழந்தைகளைப் பார்த்தால் அந்த சிசுக்களுக்கு கஷ்டம் உண்டாகும். ஏதாவது ஆகாரம் சாப்பிட்ட பிறகு பார்க்கலாம்.

ஸ்நானம்செய்த தினத்தில் வீட்டில் சமயல் செய்வதும், தேவபாத்திரங்களை தொடுவதும் கூடாது. ஸங்கடமானகாலத்தில் மறுபடியும் ஸ்நானம் பண்ணிவிட்டு பர்த்தாவுக்கு சமயல் பண்ணலாம். பகவானுக்கு அதை நிவேதனம் பண்ணக்கூடாது. ஸ்திரீகள் நாடகம் பார்ப்பது, சூதாடுவது முதலிய கெட்டகாரியங்களை ஒருகாலத்திலும் செய்யக்கூடாது. சுமங்கலியான ஸ்திரீகள் பர்த்தாவினுடைய அனுமதியில்லாமல் தானுகவே ஏகாதசீ உபவாஸம் முதலான ஓர் விருதானுஷ்டானங்களையும் செய்யக்கூடாது தானுக உபவாசமிருந்தால், பர்த்தாவினுடைய ஆயுள் குறைந்துபோகும். சுமங்கலிகள் ஏகாதசீ முதலான தினங்களில் புஷ்பம் சந்தனங்களைத் தரிக்கலாம்.

தான் பால்யத்தில் பஞ்ச ஸம்ஸ்காரம்பெற்ற ஆசாரியனிடத்திலாவது, மற்றும் ஞானம், அனுஷ்டானம், வைறுக்கியமுடைய ஆசாரியனிடத்திலாவது, சத்வக்ஞானங்களை உபதேசிக்கப்பெற்று தேகம் இந்திரியங்கள் ஸ்வாதீனமாக விருக்கிற சமயத்தில் தானுகவோ அல்லது ஆசிரியன் மூலமாகவோ பரஸமர்ப்பணத்தைச் செய்துகொள்வதும் அவசியமாகும்.

மற்றும் பதிவிருதைகளுடைய தர்மங்களை ஸீதை, ஸாவித்திரீ முதலானவர்களுடைய சரித்திரங்களைக்கேட்டு விஸ்தாரமாக தெரிந்து அனுஷ்டிக்கவும்.

விதவைகளின் தர்மம்.

விதவையான ஸ்திரீயானவள் பர்த்தா இறந்துபோன 10-வது தினத்தில் தலையை முண்டனம் பண்ணிக்கொள்ளவேண்டும். பிறகும் ஆடி, புரட்டாசி, மார்கழி, மாசி மாதங்கள் தவிர, மற்ற மாதங்களில், நிஷித்த திதி, வாரம், நக்ஷத்திரம் இல்லாத சமயங்களில் க்ஷௌரம் செய்துகொள்ளலாம். பஞ்ச ஸம்ஸ்காரம் ஆகாமலிருந்தால் ஞானம் அனுஷ்டானங்களையுடைய ஆசாரியனை ஆச்ரயித்து பஞ்ச ஸம்ஸ்காரத்தை அடைந்துகொள்ளவேண்டும். விதவைகள் சூரியன் உதயத்திற்கு ஓர் யாமம் முந்தியே படுக்கையைவிட்டு யெழுந்திருந்து முன்சொல்லியபடி காலை அலம்பி 2 தடவை ஆசமனம்செய்து பகவன்னாம கீர்த்தனைகளைச்செய்யவும். விதவையான ஸ்திரீகள் மலத்தைவிட்டால் குதஸ்தானத்தில் 48 தடவை மண்ணைதேய்த்து அலம்பவேண்டும். ஜலத்தைவிட்டால் குஹ்யஸ்தானத்தில் 12 தடவை மண்ணைபோட்டு அலம்பவேண்டும்.

விதவைகள் ருதுவாகி ஸ்நானம்பண்ணினால் கால், கை, குஹ்யஸ்தலங்களில் 128 தடவை மண்போட்டு அலம்பி, 128 தடவை ஸ்நானம்பண்ணி உலர்ந்த வஸ்திரம்தரித்து மறுபடியும் 128தடவை ஸ்நானம் பண்ணவேண்டும்.

விதவைகள் க்ஷௌரம் செய்துகொண்டால் 52 தடவை ஸ்நானம்பண்ணி உலர்ந்த வஸ்திரம்தரித்து, மறுமடியும் 52தடவை ஸ்நானம்பண்ணவேண்டும். உலர்ந்த வஸ்திரமில்லாத காலத்தில் ஈர வஸ்திரத்தில் 7 காற்று அடிக்கச்செய்தால் அதுவே உலர்ந்த வஸ்திரத்திற்கு ஸமானமாகும்.

கீழ்சொன்ன க்ஷௌரங்களை இரவில் பாதி செய்யவும். சக்தியில்லாதவர்கள், ரோகிஷ்டர்கள் முடிந்தவரையில் செய்யலாம்.

விதவைகள் பல்துலக்கக் கூடாது. 12 தடவை வாயைக் கொப்பளித்து நாக்கை வழிக்கலாம். சூரியன் உதயமான பிறகு ஸங்கல்பித்துக்கொண்டு தினந்தோறும் சிரஸ் ஸ்நானத்தையே அஷ்டாக்ஷரத்தைச் சொல்லிச் செய்யவேண்டும். பிறகு ஆசமனம் பண்ணிவிட்டு பர்த்தாவினுடைய கோத்திரத்தைச் சொல்லி —— கோத்திரம் —— சர்மாணம் மமபர்த்தாரம் தர்ப்பயாமி

யென்று மூன்றுகை ஜலத்தையும் பார்த்து: பிதரம் தர்ப்யாமி யென்று மூன்றுகை ஜலதையும், பர்த்து: பிதாமஹம் தர்ப்யாமி யென்று மூன்றுகை ஜலத்தையும், இருகையையும் சேர்த்து பித்ரு தீர்த்தத்தினால் விடவேண்டும்.

பிறகு ஆசமனம்பண்ணி தலையை துவட்டிக்கொண்டு உலர்ந்த வஸ்திரங்களை இடுப்பில் வேறும், இடுப்புக்கு மேல்பாகத்திற்கு வேறொரு வஸ்திரமுமாக தரித்து, காலை அலம்பி ஆசமனம்செய்து மூன் சொல்லியபடி உளர்த்வபுண்ட்ரம், ஸ்ரீசூர்ணம், ஜபம், பகவத் வந்தனங்களையும் செய்து, பகவானுக்கென்றே ஸங்கல்பித்து பாகத்தைப்பண்ணி, புத்திரன் முதலானவர்கள் ஆராதனம் செய்தால் அதற்கு வேண்டிய உபசாரங்களைச்செய்து தீர்த்தம் துளசிகளை ஸ்வீகரித்து பக்தியோடு பகவானே பலதடவை நமஸ்கரிக்கவும். புத்ராதிகள் ஆராதனம் செய்யாவிட்டால் தன் ஆசாரியன் உபதேசித்தபடி தானே திருவாராதனம் செய்யலாம். ஸாளக்கிராமத்தைத் தொடாமல் ஆராதிக்கவேண்டும் பிறகு அதிதிகள் வந்தால் அவர்களுக்கு பக்தியோடு அன்னமிட்டு சாப்பிட்டபிறகுதான் புஜிக்கவேண்டும்.

விடவேண்டியவைகள்.

விதவைகள் இரவில் சாப்பிடக்கூடாது. முடியாதவர்கள் பழம் முதலியவைகளை சாப்பிடலாம். சந்தனம் புஷ்பம் தரிப்பது, வெற்றிலை போடுவது, கட்டிலின்மேல் படுப்பது, கண்ணாடி பார்ப்பது, எண்ணை தேய்த்துக்கொள்வது, க்ஷௌரம் செய்துகொள்ளாமலிருப்பது, நாடகம் நர்த்தனம் பார்ப்பது, சங்கீதம் கேட்பது, பிரசை தூஷிப்பது, சூதாடுவது, பர்த்தா மாமனார் முதலானவர்களை தூஷிப்பது, மதகரமான ஆகாரங்களில் ஆசை வைப்பது காமவார்த்தைகளைப்பேசுவது, ஷி- கதைகளைப் படிப்பது, அந்ய புருஷனோடு பேசுவது, மற்றும் சிகப்புவஸ்திரம் தரிப்பது முதலான நிஷித்த காரியங்களைச் செய்யக்கூடாது.

அவசியம் செய்யவேண்டியவைகள்.

தினந்தோறும், சிரஸ்நானம், ஜபம் முதலிய நித்யகர்மங்களைச் செய்வது, ஏகாதசீ உபவாஸமிருப்பது, முடிந்தவரையில் புண்யதீர்த்தங்கள் க்ஷேத்திரங்களுக்கும் யாத்திரைசெய்வது, உத்ஸவகாலங்களில் கூட்டங்களில் புகுருமல் பகவானே ஸேவிப்பது, ப்ரதக்ஷிணம் செய்வது, பகவத்ஸன்னிதிகளில் பெருக்குவது, மெழுகுவது, கோலமிடுவது, துளஸி வளர்ப்பது, பாக

வதர்களைக்கண்டால் நமஸ்கரிப்பது, உசிதமாகவும், சக்திக் கனு குணமாகவும் அவர்களுக்கு உபகரிப்பது, பெரியோர்களிடம் ஞானம், பக்தி, வைராக்யம் மற்றும் ஆத்மகுணங்கள் விருத்தி யடையக்கூடிய ஸ்ரீ பாகவதம் முதலான புராணங்களையும், இதிகாஸங்களையும் கேட்டு கேட்டபடி நடப்பது, தான் செய்யும் ஸர்வ காரியங்களையும் ஸாத்விகத்யாகத்தோடு செய்வது, மற்றும் ஓர் க்ஷணகாலமும் வீணுகாதபடி பகவன்னம ஸங்கீர்த்தனம் முதலான நல்ல காரியங்களையே செய்யவேண்டும்.

விசேஷ ஞானசக்திகளிருந்தால் தானுகவே ஆத்ம ரக்ஷாப ரத்தை ஸர்வேச்வரனிடத்தில் ஸமர்ப்பிக்கலாம். ஞானசக்தி குறைவாயிருந்தால், ஆசாரியன் மூலமாகவாவது, ஷிபை ஸமர்ப் பித்து பின்பு கவலையற்று யதாசக்தி பகவத் பாகவத ஆசார்ய கைங்கர்யங்களைப் பண்ணிக்கொண்டு சாதகவருத்தியாக இருக்கு மவர்கள் இவ்வுலகத்திலும் ஸாதுக்களால் கொண்டாடப்பட்டு, பிறகு ஸ்ரீ வைகுண்டத்திலும் ஸ்ரீமானை நாராயணனோடு ஸமான மாக ஸர்வாநந்தங்களையு மனுபவித்து அவ்வாநந்த பரீவாகமான நித்ய கைங்கர்யங்களையடைந்து வாழ்வார்கள்.

மற்றும் விஸ்தாரமாக ஸ்திரீகளுடைய தர்மங்களைத் தெரிந்து கொள்ள ஆசையுள்ளவர்கள் தர்மசாஸ்திரங்களிலும், இதிகாஸ புராணங்களிலும பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்.

பிழை திருத்தம்.

பக்கம்.	பிழை.	திருத்தம்.
9	த்யவம்	த்வயம்.